# 13. அருள் நிறை மரியே



மரியாள் மிகவும் தாழ்மையும் கீழ்ப்படிவும் உள்ள ஒரு பெண்மணி ஆவாள்.

அவள் எந் நேரமும் இறை தந்தையுடன் பேசுவாள்

இறை தந்தையும் மரியாளுடன் கதைத்தார்.

மரியாள் இறை தந்தைக்குச் செவிமடுத்தாள்.

அவரது விருப்பத்தை நிறைவேற்றினாள்

இறை தந்தை சந்தோசப்பட்டார்.



நாமும் இறை தந்தைக்குச் செவிமடுப்போம்.

கீழ்ப்படிவோம்

மரியாளைப்போல் நாமும் இறை தந்தையுடன் பேசுவோம்.

அருள் நிறைந்த மரியாயே என்ற செபத்தைப் பக்தியுடன் சொல்லுவோம்.